முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1473

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.10.2023,** புதன்கிழமை

1. அருள்காட்டும் மாதவராஜனாக
அகிலத்துக்கு அவதாரம் புரிந்த அரங்கனே
இருள்போக்கி மக்களுக்கு ஞானபலம் ஊட்ட
எங்கும் சரவணச் சுடரேற்றி வழிகாட்டுகின்ற தேசிகனே
2. தேசிகனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
தெரிவிப்பேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் புரட்டாசி மாதம் 24 ம் நாள், 11.10.2023, புதன்கிழமை)
ஆசிதந்து ஆறுமுகன் யான் உன்னுள்ளே
ஆக்கமாக ஆற்றலாக கலந்துவிட்டு
3. கலந்தபடி அரங்கன் நீ
கலியுகத்தின் வழி காட்டி
கலந்தபடி அரங்கன் நீ
கலியுகத்தின் சிறந்த ஞானி
4. பலம் கொண்டு தர்மபலமும் கொண்டு
பரிபக்குவ பரமானந்த கதியும்
பார்ப்பவர்க்கு சயன தீட்சை வழியும்
பார்ப்பவர்க்கு நயன தீட்சை வழியும்
5. பழுதின்றி நின் கரம்பட மகாமந்திர உபதேசங்களும்
வகைபட உலகோர் ஏற்கும் காலம்
வடிவேலன் உடனிருந்து அவர்கட்கு பலமான அருட்காட்சி
அருட்காட்சி சர்வபலமும் பாலதண்டாயுதன்
6. யான் தந்து அருள்புரிவேன்
அருளாக அறமாக அரங்கன் நீ
அற்புதத்தை இந்த கலியில் நடத்தவேண்டி
வேண்டியே என் அவதாரம் பெற்றுள்ளாய்

7. வினவிட உனைக்காணும் அன்பர்கட்கு
இனிபிறவா பெரும் பேறு உறுதிஉறுதி
வினவிட உன் தர்மத்தைக் காப்பவர்க்கு
இனிபிறவா பெரும் பேறு உறுதிஉறுதி

8. உறுதி தந்து அரங்கன் உன் சன்மார்க்க வழி
உலகம் வந்தால் சடுதி இந்த
உலகம் மாற்றம் காணும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—